Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 85

வியாழக்கிழமை
19 பெப்ரவரி 2026

மாசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வங்கக்கடலில் காற்றழுத்தம்; மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, பெப். 19
வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த நிலைமைகள் காரணமாக, மீனவர்களுக்கு இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தால் விசேட எச்சரிக்கை விடுக்கப் »11

வடக்கு - கிழக்கில்

## போரால் இடம்பெயர்ந்தோருக்கு வீடமைக்க 20 லட்சம் ரூபா!

அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

விரிவு பக்கம்:- 06

## முறையற்ற வகையில் ஆசிரியவளம் பகிர்வு!

ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு

விரிவு பக்கம்:- 02

## உலக வங்கியிடமிருந்து 400 மில்லியன் டொலர்!

அனுமதித்தது அமைச்சரவை

விரிவு பக்கம்:- 05

திஸ்ஸ விகாரை விவகாரம்

# காணி விடுவிப்பில் தொடர்ந்து இழுபறி

கொழும்புப் பேச்சுவார்த்தையில் பின்னடைவு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 19

யாழ்ப்பாணம் - தையிட்டி திஸ்ஸ விகாரை விடயம் தொடர்பில், கொழும்பில் நேற்றுப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற நிலையில், காணிகளை விடுவிப்பதற்கு இழுபறி நிலை தொடர்கின்றது. »11

## பாரபட்சமாக நடக்கிறது பௌத்தசாசன அமைச்சு

பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 19
திஸ்ஸ விகாரை விடயத்தில் பௌத்தசாசன அமைச்சு பாரபட்சமான முறையில் செயற்படுகின்றது என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட எமது காணிகளை எம்மிடம் மீள ஒப்படைக்குமாறு வலியுறுத்தி போராட்டங்களை »11



## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றுமுழுதாக நீக்குக!

நல்லூர்ப் பிரதேசசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 19
பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு தேவையற்றது என்றும், பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியும் நல்லூர் பிரதேசசபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
நல்லூர் பிரதேசசபையின் அமர்வு தவிசாளர் பத்மநாதன் மயூரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.
இதன்போது, பயங்கர »11



## உழவியந்திரத்துடன் மோதி ஆணொருவர் உயிரிழப்பு

கொடிகாமத்தில் சம்பவம்

கொடிகாமம், பெப். 18
கொடிகாமம் - நாவலடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில், ஆணொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற பேருந்தை, »11

முச்சந்தி முரளி




## பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

மாற்றுச் சட்டங்களும் அவசியமில்லை

யாழ். பல்கலைக்கழகத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 19
பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும். அதற்குப் பதிலாக மாற்றுச் சட்டங்களை உருவாக்கவேண்டிய அவசியம் இல்லை என்று வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கையெழுத்துப் போராட்டம் இடம்பெறவுள்ளது. »11

## பியர் போத்தலால் குத்தப்பட்டு பெண்ணொருவர் படுகாயம்!

கணவன் தலைமறைவு

யாழ்ப்பாணம், பெப். 19
வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் பியர் போத்தலால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் படுகாயம் அடைந்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
ஆசிரியரான குறித்த பெண் வர்த்தக நிலையம் ஒன்றையும் நடத்தி வருகின் »11

## ஐஸ் போதைப்பொருளுடன் ஐந்து இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 19
ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐந்து இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். »11

## 5 கிராம் ஐஸ்; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 19
5 கிராம் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச் »11

மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4351 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 38 60 67 77 |
| விசேட எழுத்து | W |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1418 |
| வெற்றி இலக்கம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 29 44 51 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0377 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 3 5 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2457 |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 10 |
| வெற்றி இலக்கங்கள் | 06 13 56 73 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6109 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 0 4 2 5 0 7 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2139 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 23 60 74 78 |
| விசேட எழுத்து | R |

**சுப துவசக்**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0225 |
| வெற்றி இலக்கம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 25 35 59 |

# வடக்கில் சமச்சீரற்ற நிலையில் ஆசிரியர்வளப்பரவலாக்கம்!

## வன்னி மாணவர்கள் பாதிப்பு; ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, பெப்.19**

**வடக்கு மாகாணத்தில் நிலவும் சமச்சீரற்ற ஆசிரியர் வளப்பரவலாக்கம் காரணமாக மாணவர்களின் கல்விச்சமத்துவம் பாதிக்கப்படுகின்றது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 81 கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் மிகையாக உள்ளனர். ஆனால், அதே மாகாணத்தின் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள 6 கல்வி வலயங்களில் 46 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கையில் வெறும் 50 சதவீதத்தினர் மட்டுமே பணியில் உள்ளனர். ஒரு பகுதியில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் இருக்கும்போது, மற்றொரு பகுதியில் ஆசிரியர்கள் இல்லாது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. இது அரச வளங்கள் சரியாகப் பயன்படுத்தப்பாமையைக் காட்டுகிறது. வடக்கில் ஏற்கனவே குறிப்பிட்ட பாட ஆசிரியர்கள் 'மிகை' என வகைப்படுத்தப்படுவதால், புதிய பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்க அண்மைய வர்த்தமானி அறிவித்தல் இடமளிக்கவில்லை.

வன்னிப் பகுதியில் தகுதியான பட்டதாரிகள் இருந்தும், வெற்றிடங்கள் இருந்தும், 'மாகாண ரீதியான மிகை' என்ற போர்வையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படுவதோடு மாணவர்களின் கலைத்திறன் கல்வியும் பாதிக்கப்படுகிறது. யாழ்ப்பாண நகர்ப்புறங்களில் மிகையாகத் தேங்கியுள்ள ஆசிரியர்களை, பற்றாக்குறை நிலவும் தீவக வலயங்கள் மற்றும் வன்னி மாவட்டங்களுக்கு உடனடியாகப் பரவலாக்கம் செய்யவேண்டும். அனைத்து மாவட்ட மாணவர்களுக்கும் சமமான அளவில் ஆசிரியர் வளங்கள் கிடைப்பதை மத்திய அரசாங்கமும் மாகாணக் கல்வி அமைச்சுப் பிரிவும் உறுதிப்படுத்தவேண்டும். இந்தச் சமச்சீரற்ற நிலையைச் சீர்செய்வதன் மூலமே, வடக்கின் ஒட்டுமொத்த கல்வித்தரத்தை உயர்த்தமுடியும்-என்றார். (ச-246)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| வெற்றி வாரம் | 0817 |
| திகதி | 18.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 7 3 2 2 0 5 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3083 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 36 38 70 78 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 09 29 59 78 |
| வெற்றி வாரம் | 5244 |

**SASIRI DLB**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0913 |
| வெற்றி இலக்கம் | 09 28 48 |

**லக்ன ராசி DLB**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| | மேஷம் |
| வெற்றி இலக்கம் | 03 09 35 60 |
| சீட்டிழுப்பு வாரம் | 4795 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கம் | 35 41 45 52 |
| வெற்றி வாரம் | 2259 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 18.02.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 24 47 62 63 |
| வெற்றி வாரம் | 2909 |

# ஊழல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளியிடுவோம்

## அமைச்சர் ஆனந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப்.19



ஊழல் அரசியல் கலாசாரத்தால் ஊழல், மோசடிகள் நிறைந்த நாடாக இலங்கை இருந்தது. போதைப்பொருள் மற்றும் அரசியல்வாதிகளும் பாதாள உலகக்குழுக்களும் ஒன்றாகச் செயற்பட்ட காலம் இருந்தது. அவற்றுக்கு நாங்கள் முற்றுப்புள்ளி வைத்து வருகிறோம் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

'வளமான நாடு அழகான வாழ்க்கை' எனும் கொள்கைத்திட்டத்தின் ஊடாக நாட்டு மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளோம். அதில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் பிரதானமாக பொருளாதார ஸ்திரத்தன்மையை குறுகிய காலத்தில் ஏற்படுத்தியுள்ளோம். அதனுடன் அரசியல் கலாசார மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளோம். அவற்றுக்கு நாங்கள் முற்றுப்புள்ளி வைத்துவருகின்றோம். நாங்கள் இதுதொடர்பில் முன்னெடுக்கவேண்டிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஏனைய விடயங்களையும் நிறைவேற்றுவோம்-என்றார். (ச-இ)

# டைனமைட் பயன்படுத்தி மீன் பிடித்தவர் கைது!

## 450 கிலோ மீன்கள் மீட்பு

மன்னார், பெப்.19

மன்னார், ஓலைத்தொடுவாய் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் டைனமைட் வெடிபொருள்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மீனவரொருவர் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போதே மீனவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து டைனமைட் மூலம் பிடிக்கப்பட்ட சுமார் 450 கிலோ மீன், ஒரு வாகனம் மற்றும் வெடிபொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபரை சான்றுப்பொருள்களுடன் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்த நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



# கொலையாளிகளுக்கு உதவிய சகோதரர்கள் இருவர் கைது!

கொழும்பு, பெப்.19

கடந்த வெள்ளிக்கிழமை அத்துருகொடவில் சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், சட்டத்தரணியின் அன்றாட நடவடிக்கைகளை உளவு பார்த்து, அவர் சூப்பர் மார்க்கெட் வாகனத் தரிப்பிடத்தில் இருப்பதைக் கொலையாளிகளுக்கு தகவல் வழங்கினரென சகோதரர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள 'துட்டு' என்றழைக்கப்படும் தரிந்து மதுசங்க மற்றும் 'மோதர நிபுண' ஆகியோரின் உத்தரவின் பேரில், இந்தச் சகோதரர்கள் 7 நாள்களுக்கு காரை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர்.

கொடிகாவத்தைப் பகுதியில் முச்சக்கரவண்டியில் கொண்டுவரப்பட்ட துப்பாக்கிப் பார்சலை இவர்கள் பெற்றுக்கொண்டு, கொலையுண்ட சட்டத்தரணியின் வாகனத்துக்கு அருகில் வந்து, துப்பாக்கிச்சூட்டுக்கு சில மணிநேரங்களுக்கு முன்பு அதனைக் கொலையாளிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

அத்துடன் சட்டத்தரணியின் அன்றாட நடவடிக்கைகளை உளவு பார்த்து, அவர் சூப்பர் மார்க்கெட் வாகனத் தரிப்பிடத்தில் இருப்பதைக் கொலையாளிகளுக்கு இவர்கள் அறிவித்துள்ளனர். இந்தக் குற்றத்துக்கு இவர்கள் பணத்தைப் பெறாது மாறாக 'ஐஸ்' போதைப்பொருளைப் பெற்றுள்ளனர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டிஜிற்றல் மாற்றத்துக்கு 50 மில். டொலர் கடன்!

கொழும்பு, பெப்.19

இலங்கையின் அரச சேவைகளை நவீனமயப்படுத்தி, வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள இலங்கை டிஜிற்றல் இயல்மாற்றக் கருத்திட்டத்துக்கு உலக வங்கி குழுமத்திடமிருந்து 50 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2025 -2030 வரையான காலப்பகுதிக்கான டிஜிற்றல் பொருளாதார மூலோபாயத்தின் கீழ் இந்தக் கருத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. டிஜிற்றல் பொறிமுறைகள் ஊடாக ஊழலற்ற மற்றும் விரைவான அரச சேவையை மக்களுக்கு வழங்குவதே இதன் முதன்மை நோக்கமாகும். (ச-இ)

## தற்காலிகமாக கைவிடப்பட்டது ரயில் சாரதிகளின் போராட்டம்

கொழும்பு, பெப்.19

நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல் அறிவிக்கப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ரயில் சாரதிகள் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர். ரயில் சாரதி சேவைக்குப் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட சாரதிகளுக்கான குழுவில், இராணுவ அதிகாரிகள் குழுவொன்றுக்கும் ரயில் சாரதிப் பயிற்சி அளிக்க எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கும் எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்திருந்தனர். ஆயினும் பயிற்சியில் ஈடுபடவிருந்த 20 இராணுவ அதிகாரிகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்துப் பிரதி அமைச்சர் அறிவித்ததை அடுத்து, பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## பேராதனைப் பாலம் ஏப்ரலுக்குள் சீரமைப்பு



கொழும்பு, பெப்.19

டித்வா புயலால் சேதமடைந்துள்ள பேராதனைப் பாலத்தின் ஊடான ரயில் போக்குவரத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். குறுகிய இரண்டரை மாதக் காலப்பகுதிக்குள் ஆயிரத்து 200 கிலோமீற்றர் நீளமான ரயில் பாதை சீரமைக்கப்பட்டுள்ளது. இதற்காக முப்படையினர் ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

பேராதனைப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடம் மற்றும் பல தரப்பினரின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன-என்றார். (எஇ)

## கொக்ஹெய்னுடன் மூவர் கைது

கொழும்பு, பெப்.19

பிலியந்தலை பகுதியில் தொலைக்காட்சி நடிகர் உட்பட மூன்று பேர் கொக்ஹெய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் 26 மற்றும் 28 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)



## மின்சாரம் தாக்கியதில் ஒருவர் சாவு

கொழும்பு, பெப்.19

கம்பஹா நீர்கொழும்பு பகுதியில் மின்சாரம் தாக்கியதில் தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்த பழுதடைந்த மின்விசிறியைத் திருத்த முற்பட்டபோதே மின்சாரம் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## ஓய்வு பெறுவதற்கு சிறந்த நாடு இலங்கை

### புகழ்பெற்ற பயண இதழ் பரிந்துரை

கொழும்பு, பெப்.19

உலகப் புகழ்பெற்ற அமெரிக்க பயண இதழான 'TRAVEL + LEASURE' இலங்கையை ஓய்வுபெறுவதற்கு சிறந்த நாடாகப் பரிந்துரைத்துள்ளது. ஆசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளைவிட இலங்கையில் வாழ்க்கைச்செலவு குறைவாக இருக்கின்றது என்ற அடிப்படையில் ஓய்வுபெறுவதற்கு இலங்கையைச் சிறந்த நாடாகப் பரிந்துரைத்துள்ளது. இலங்கையில் உணவு, தங்குமிடம், போக்குவரத்து மற்றும் சுகாதாரப் பராமரிப்புக்கான செலவுகள் மிகக் குறைவு என்று அந்த இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உணவு மற்றும் பானங்கள் மலிவு விலையில் கிடைக்கின்றன என்றும், இரண்டு பேருக்கு ஒரு புதிய மீனின் விலை சுமார் 3.50 டொலர் என்றும் அன்னாசிப்பழத்தின் விலை 0.20 டொலர் மட்டுமே என்றும் குறிப்பிட்டுள்ளது.

இரண்டு மணிநேர ரயில் பயணத்துக்கு ஒரு டொலர் செலவாகும், மூன்று மைல் முச்சக்கரவண்டிப் பயணத்துக்கு சுமார் இரண்டு டொலர் செலவாகும் என்பதால், போக்குவரத்து மற்றொரு பெரும் செலவை மிச்சப்படுத்தும் என்றும் அந்த இதழில் கூறப்பட்டுள்ளது.

ஓய்வுபெறுவதற்கான மிக முக்கியமான காரணிகளில் ஒன்று தரமான, மலிவு விலை சுகாதாரப் பராமரிப்பாகும். கொழும்பு மற்றும் பிற புறநகர்ப் பகுதிகளில் உள்ள தனியார் மற்றும் அரச மருத்துவமனைகளில் சுகாதார சேவைகள் நவீன வசதிகளுடன் வலுவாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## இடைவெளி வருத்தம்

ஒரு ஆமிக்காம்புக்கு புதிசா கொமாண்டர் வந்திருக்கிறார். அவருக்கு அங்க இருந்த ஒரு நடைமுறை விசித்திரமா இருந்திருக்கு.அந்தக் காம்புக்கு வெளியில இருக்கிற ஒரு வெள்ளைக் கதிரையொண்டுக்கு முன்னால எப்பவும் ரண்டு ஆமிக்காரர் சென்றிக்கு நிப்பினமாம். அவையள் ஏன் அப்பிடிக் காரணகாரியம் இல்லாமல் நிக்கினம் எண்டு கொமாண்டருக்கு விளங்கேலை. சென்றிக்கு நிக்கிறவைக்கும் ஏன் நிக்கிறம் எண்டு தெரியாது. 'முந்தி இருந்த கொமாண்டரின்ர ஓடர். அதால நிக்கிறம்' எண்டு அவை சொல்லியிருக்கினம். அப்ப முந்தி இஞ்ச கொமாண்டரா இருந்தவரைக் கேட்டால் விசயம் தெரிஞ்சிடும் எண்டு அவரைக் கேட்டால் 'எனக்கு முதல் இஞ்ச கொமாண்டரா இருந்தவர் செய்ததைத்தான் நானும் செய்தன்' எண்டிருக்கிறார். அவருக்கு முதல் கொமாண்டரா இருந்தவரும் தான் கொமாண்டரா வரேக்க என்ன நடைமுறையோ அதைத்தான் பின்பற்றினதாச் சொல்லியிருக்கிறார். இப்பிடி இதுக்கு முதல் அந்த காம்புக்குப் பொறுப்பா இருந்தவையெல்லாரும் 'முந்தி இருந்தவை செய்ததைச் செய்தம்' எண்டு சொல்லியிருக்கினம். கடைசியில, அந்தக் காம்புக்குப் பொறுப்பா இருந்து இப்ப பெஞ்சன் எடுத்த அதிகாரியிட்ட இப்ப கொமாண்டரா வந்தவர் போன் எடுத்து 'எங்கட காம்பில ஒரு வெள்ளைக் கதிரைக்குப் பக்கத்தில ரண்டு பேர் சென்றிக்கு நிக்கினம். அது ஏன் எண்டு தெரியுமோ?' எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு அந்த அதிகாரி 'எட இன்னும் அந்தக் கதிரைக்கு அடிச்ச வெள்ளைப் பெயின்ற் காயேலையோ?' எண்டு திருப்பிக் கேட்டிருக்கிறார். பெஞ்சன் எடுத்தவர் அந்தக் காம்பில இருந்து விலகேக்க, ஒரு கதிரைக்கு வெள்ளைப் பெயிண்ட் அடிச்சிருக்கினம். அந்தப் பெயின்ற் காயமுதல் அதுக்கு மேல ஆரும் இருந்திடக்கூடாது எண்டு ரண்டு பேரை சென்றிக்கு விட்டிட்டு வந்திருக்கிறார். அது விளங்காமல் இப்ப மட்டும் அப்பிடிக் கதிரைக்கு சென்றிக்கு நிக்காட்டி பெருங்குற்றமாகிடும் எண்டமாதிரி, வருசக்கணக்கில சென்றிக்கு நிண்டிருக்கினம்.

இப்ப என்னத்துக்கு உந்தக் கதை எண்டு யோசிப்பீங்கள். காரணம் இல்லாமல் பட்சி ஒண்டும் சொல்லாது தானே. கொரோனா வந்தமூட்டம், அந்த வருத்தம் தொத்தாமல் இருக்க கனக்க சுகாதார விதிமுறையளை அரசாங்கம் கொண்டந்தது. அதில ஒண்டுதான் எல்லாரும் ரண்டுமீற்றர் இடைவெளி விட்டு பழகோணும் எண்ட விதி. வீட்டிலையும் சரி, பொது இடங்களிலையும் சரி இப்பிடி ரண்டடி தள்ளி நிண்டு கதைச்சாலோ, பழகினாலோ கொரோனா தொத்திறதைக் குறைக்கலாம். இப்பிடி ஆக்களுக்குள்ள இடைவெளியைப் பேணுறதுக்காக ஆஸ்பத்திரியள், வங்கியள், கச்சேரி, பிரதேச செயலகம் எண்டு தங்கட தேவைக்காகப் போற சனத்துக்கும், அங்க இருக்கிற அதிகாரியளுக்கும் இடையில ரண்டு மீற்றர் இடைவெளி விட்டுத்தான் கதிரையள் போட்டிருப்பினம். ஆனால் கொரோனா மெல்ல மெல்லக் குறைஞ்சு, இப்ப அதை எல்லாருமே மறந்து போய் வருசக்கணக்காகியும், இன்னமும் அந்த ரண்டடி இடைவெளியை இலங்கையில பேணுற ஒரேயொரு இடம் எண்டுற சாதனை தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு கிடைச்சிருக்குது.

அங்க ஓ.பி.டி. யில (வெளிநோயாளர் பிரிவில) வருத்தம் எண்டு போறவை டாக்குத்தரின்ர மேசையில இருந்து ரண்டடிக்கு அங்காலயுள்ள கதிரையில இருந்துதான் தங்களுக்கு என்ன வருத்தம் எண்டு மூலம் தள்ளுற அளவுக்கு கத்திச் சொல்லோணுமாம். டொக்டருக்கும் நோயாளிக்கும் இடையில கதைக்கிற விசயங்கள் தனிப்பட்டதாவும், மற்றவைக்குத் தெரியாமலும் இருக்கோணும். ஆனால் தெல்லிப்பழையில வருத்தம் எண்டு போறவை இப்பிடி ரண்டடிக்கு அங்கால இருக்கிற டாக்குத்தருக்கு கேக்கோணுமெண்டதுக்காக கத்திச் சொல்ல வேண்டி இருக்கிறதால, அவருக்கு என்ன வருத்தம், என்ன பிரச்சினை எண்ட எல்லா விசயமும் வெளியில நிக்கிற எல்லாருக்கும் வடிவாக் கேக்கும். இப்பிடித் தங்கட பிரைவசி இல்லாமல் போகுதெண்டும், ஏதோ தீண்டத்தகாத ஆக்கள் மாதிரி வருத்தக்காரரை ரண்டடிக்கு அங்கால தள்ளிவைச்சு டாக்குத்தர்மார் சோதிக்கிறதாலையும் கனபேர் இப்ப அங்க போகாமல் பஸ் எடுத்து பெரியாஸ்பத்திரிக்குத்தான் வருகினமாம். வருத்தக்காரரை இப்பிடி ரண்டடிக்கு அங்கால நிப்பாட்டி சோதிக்கிற வருத்தத்துக்கு, ஆராவது நல்ல மருந்து குடுத்து மாத்தமாட்டினமோ?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமுறை வகுப்பு தொடக்கவிழா

யாழ்ப்பாணம், பெப்.19

அனைத்துலக பன்னிரு திருமுறை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில், 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நூற்றாண்டு விழா நினைவு திருமுறை வகுப்பு தொடக்கவிழா, நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் தருமையாதீன திருமுறை வகுப்பு யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் திருமதி கீதநந்தினி சிவகுமாரக்குருக்கள் விளக்கவுரையையும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன், யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் கலாநிதி ஏரம்பமூர்த்தி அனுசாந்தன் ஆகியோர் வாழ்த்துரையையும் நிகழ்த்தினர். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (க-159)

பருத்தித்துறை, கொட்டடி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்புற இடம்பெற்றது. அங்கப்பிரதட்சனம், பாற்குடம், கற்பூரச்சட்டி எடுத்து பக்தர்கள் நேர்த்திக் கடன் நிறைவேற்றி னர். (ச-100)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா கண்ணலிங்கேஸ்வரர் தேவஸ்தான மகா சிவராத்திரி நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. (எ-41)



# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், பெப்.19

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் 85ஆவது இரத்ததான முகாம் நெடியகாடு, வல்வெட்டித் துறையிலுள்ள கணபதி மஹால் திருமண மண்டபத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது

18 வயதுக்கு மேற்பட்ட 55 வயதுக்குட்பட்ட குருதிக்கொடை வழங்க விரும்பும் அனைவரும் முன்பதிவு செய்துகொள்ள முடியும் என்றும், ஏற்கனவே குருதிக்கொடை வழங்கியிருந்தால் 60 வயது வரை குருதிக் கொடை வழங்கமுடியும் எனவும் மேலதிகத் தகவல்களுக்கு 0779911131 எனும் தொலைபேசி இலக்கத் தினூடாகத் தொடர்புகொள்ள முடியுமெனவும் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத் தலைவர் பா. வீரசுரேந் திரன் அறிவித்துள்ளார். (எ-41-100)

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 09 . 1942



மறைவு 18 . 02 . 2026

### கனகரத்தினம் அன்னலட்சுமி

அச்சுவேலி, வளலாயைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவு 6ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் அன்னலட்சுமி அவர்கள் நேற்று (18.02.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகதம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வசீகரனின் தாயாரும், கபிலராணி (ஆசிரியை மண்டைதீவு மகாவித்தியாலயம்) அவர்களின் மாமியாரும், வர்சாவின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, தங்கரெத்தினம், சுந்தரலிங்கம், சிவசுப்பிரமணியம் மற்றும் நேசரெத்தினம், கமலாதேவி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், சிலோன்மணி, பாக்கியலட்சுமி, செல்லம்மா, நாகராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2026) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

T.P : 077 921 1104 (மருமகள்)

(CS/60791) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## செய்யப்படாத பரிகாரம்...!

தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழர்களை 'சட்டவிரோத குடியேறிகள்' என்ற நிலையில் பார்ப்பதை இந்திய மத்திய அரசாங்கம் கைவிடவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தமிழக முதல்வர் ஸ்டாலின். தமிழகத்தில் தற்போது வசித்துவரும் 89 ஆயிரம் ஈழத் தமிழர்களில் 40 வீதமானவர்கள் இந்தியாவில் பிறந்தவர்கள். ஏனையவர்களில் வெகு சிலரைத் தவிர மிகுதி அனைவரும் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் வசிப்பவர்கள். ஆதலால், அவர்களை இந்தியர்கள் என்ற நோக்கில் அணுகுவதே பொருத்தமாக இருக்கும் என்றும் அவர் பரிந்துரைத்துள்ளார். ஈழத் தமிழர்களுக்கு முறையான அங்கீகாரம் வழங்கப்படவேண்டும் என்று மிக நீண்டகாலமாக பல்வேறு வலியுறுத்தல்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் நீட்சியே தமிழக முதல்வர் ஸ்டாலினின் அண்மைய கருத்துகள்.

ஸ்ரீலங்கா அரசாங்கங்களைப் போலவே, இந்தியாவிலும் மாறிமாறி ஆட்சியில் இருக்கும் மத்திய அரசாங்கங்கள் ஈழத்தமிழர்களையும் அவர்களின் நலன்களையும் தொடர்ச்சியாகப் புறக்கணித்தே வருகின்றன. பிராந்திய அரசியலுக்கும், தூதரக உறவுகளுக்கும் மத்தியில் ஈழத்தமிழர்களின் விவகாரம் ஆலைவாய்க் கரும்பாக நெரித்து நசுக்கப்படுகின்றது. ஈழத்தமிழர்களுக்கு தமது ஆட்சியில் விடிவு கிட்டும் என பா.ஜ.க. பலமுறை கூறியபோதிலும், 'காங்கிரஸே எவ்வளவோ பரவாயில்லை' என்பதாகத்தான் பிரதமர் மோடியின் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. 2024ஆம் ஆண்டு - இந்திய மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் அரசாங்கத்தால் அங்கு குடியுரிமைத் திருத்தச்சட்டம் புதுப்பிக்கப்பட்டது. இதன்மூலம், கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு - இந்தியக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மிகவும் இலகுவாக்கப்பட்டன. ஆனால், அந்த வாய்ப்பு அனைவருக்குமானதாக அமையவில்லை. குறிப்பாக ஈழத்தமிழர்கள் மிகவும் கோரமான முறையில் வஞ்சித்துப் புறமொதுக்கப்பட்டனர்.

அயல்நாடுகளில் வஞ்சிக்கப்படும் இந்துக்களும், சமணர்களும், பௌத்தர்களும் மற்றும் சீக்கியர்களும் தான் குடியுரிமைத் திருத்தச்சட்டத்தின் கீழ், இந்தியக் குடியுரிமையை இலகுவாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேற்குறிப்பிட்டுள்ள நான்கு பிரிவினருக்கும் அப்பாற்பட்ட இன, மத குழுமங்களுக்கு நீதியென்பது இன்னமும் இந்தியாவில் எட்டாக்கனிதான். இந்தியக் குடியுரிமை கிட்டுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ள இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்களை விடவும், ஈழத்தமிழர்கள் குடியுரிமை தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்க கூடுதல் உரித்துடையவர்கள். இலங்கையில் இடம்பெற்ற நீண்டதும் நெடியதுமான போரில் இந்தியாவின் நேரடித் தலையீடு மிக அதிகம். அதற்குப் பரிகாரமாகவேனும் ஈழத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்க இந்தியா முன்வரவேண்டும்.

70 ஆண்டுகளுக்கும் குறையாத இழிநிலை அரசியலாலும், 30 ஆண்டுகளுக்கும் குறையாக ஆயுதப் போராட்டத்தாலும் ஈழத்தமிழர்கள் அடைந்த துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. இனியும் இங்கு வாழமுடியாது என்ற கட்டத்தில் தான் பல்லாயிரம் ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்குள் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். ஆனால், திறந்தவெளிச் சிறைச்சாலை போன்ற அகதி முகாம் வாழ்க்கையே இன்றளவும் அவர்களுக்கு முடிவென ஆகியிருக்கின்றது. சொல்லப் போனால், இந்த விடயத்தில் கொழும்பை மீறி ஓர் அடியேனும் எடுத்து வைக்க புதுடில்லி தயாரில்லை என்பது உண்மை.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### பொய்யாமொழி

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

**பொருள்:** உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான்.



## உலக வங்கியிடமிருந்து 400 மில்லியன் டொலர்

*அமைச்சரவை அனுமதி*

**கொழும்பு, பெப்.19**
**இலங்கையின் பொருளாதார மீட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் கட்டமைப்பு மாற்றங்களை வலுப்படுத்தும் நோக்கில் உலக வங்கியிடமிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்தின் ஒரு பகுதியாக, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதி பெறுவது அவசியமாகக் கருதப்படுகிறது. அந்தவகையில், 2026 - 2028 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான புதிய 3 ஆண்டு கால வேலைத்திட்டத்தின்கீழ் இந்த நிதி வழங்கப்படவுள்ளது.
சர்வதேச சந்தையில் இலங்கையின் பொருளாதாரப் போட்டித்தன்மையை உயர்த்துதல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துதல், அரச நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல் மற்றும் பலமான பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குதல் இந்த 3 ஆண்டு கால வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.
அதன்படி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அவர்கள் முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை தற்போது அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)



## 46 நாள்களில் 4 இலட்சம் சுற்றுலாவிகள்

கொழும்பு, பெப்.19
கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் கடந்த 15ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் நாட்டுக்கு 4 இலட்சத்து 36 ஆயிரத்து 666 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் இந்தியாவில் இருந்து 78 ஆயிரத்து 157 பேரும், பிரிட்டனில் இருந்து 47 ஆயிரத்து 347 பேரும், ரஷ்யாவில் இருந்து 39 ஆயிரத்து 741 பேரும் இலங்கைக்குச் சுற்றுலா வந்துள்ளனர். (எ-இ)

## அரபுக் கல்லூரி பதிவுகள்; விரைவில் தடை நீக்கம்

அரபுக் கல்லூரிகளுக்கான புதிய சட்டமூலம் மற்றும் பாடத்திட்டம் தயாரிக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளது என்றும், விரைவில் பதிவு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என்றும் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் அரபுக் கல்லூரிகளைப் பதிவு செய்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. தற்போது 321 கல்லூரிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் இந்த நடைமுறை விரைவுபடுத்தப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார். (ச-இ)

## கொழும்பில் நீர் விநியோகம் தடை

கொழும்பு, பெப்.19
கொழும்பின் பல பகுதிகளில் நேற்று நீர் விநியோகம் தடைப்பட்டது.
அம்பத்தலை முதல் தெஹிவளை வரையிலான பிரதான நீர் விநியோகக் குழாயில் திடீரென ஏற்பட்ட கசிவே இதற்கான காரணம் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது. (எ-இ)




## 'டிஜிற்றல் நோமாட்' விசா இலங்கையில் அறிமுகம்

கொழும்பு, பெப்.19
இலங்கையைத் தொலைதூர வேலைகளுக்கான சர்வதேச மையமாக மாற்றும் நோக்கில், வெளிநாட்டு நிபுணர்களுக்காக புதிய டிஜிற்றல் நோமாட் விசா வகையை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், அந்நியச் செலாவணியை ஈர்க்கவும் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு வெளிநாட்டவரும் இதற்கு விண்ணப்பிக் கலாம். இந்த விசா ஒரு வருட காலத்துக்குச் செல்லுபடியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### நாளை

வெள்ளிக்கிழமை - மாசி 08
20.02.2026

சுபநேரம் : 06.32 - 08.02
ராகுகாலம் : 11.02 - 12.32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிவுல் ஓயாத் திட்டத்தால் தமிழ் நிலங்கள் அழியும்

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், பெப்.19**

**வன்னிப் பிராந்தியத்தில் திட்டமிடப்பட்டுள்ள கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் வெறும் விவசாய மேம்பாட்டுத்திட்டம் மட்டுமல்ல, அது தமிழ் மக்களின் நிலத்தொடர்பைத் துண்டிக்கும் ஓர் இன அழிப்பு நடவடிக்கை என அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இதனூடாக பாரம்பரியத் தமிழ் கிராமங்களான வெடிவைத்த கல்லு, பெரிய மருதோடை, கூளாங்குளம், ஈச்சங்குளம், கோவில் புளியங்குளம், காட்டுப் பூவரசங்குளம், காஞ்சுரமோட்டை என்பன நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. சுமார் 910 ஏக்கர் விளைநிலங்கள் மற்றும் 2300 ஹெக்ரேயருக்கும் அதிகமான நிலப்பரப்பு நீரேந்து பகுதிக்குள் செல்லவுள்ளது. காடுகளை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் தேன் சேகரிப்பு, பழங்கள் பறித்தல் மற்றும் விறகுத் தேவைகள் முற்றிலும் தடைப்படும். காடுகள் அழிக்கப்படுவதால் மழை வீழ்ச்சி குறையும். ஏற்கனவே உள்ள யானை - மனித மோதல் மேலும் தீவிரமடையும். வன்னிச்சிற்றரசர்கள் மற்றும் பண்டார வன்னியன் வரலாற்றுடன் தொடர்புடைய பல தொல்லியல் எச்சங்கள் இந்தத் திட்டத்தினால் அழிவடையும் அபாயமுள்ளது. எனவே இந்தத் திட்டத்தை எதிர்த்து அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து கட்சி வேறுபாடின்றி மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். பல்கலைக் கழக நிபுணர்களைக் கொண்டு திட்டத்தின் பாதிப்புகள் குறித்த புள்ளி விபர ஆவணங்களைத் தயாரிக்க வேண்டும்- என்றார். (ச-இ)



வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

## போரால் இடம்பெயர்ந்தோருக்கு வீடுகள் அமைக்க 20 இலட்சம் ரூபா

### விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.19

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போர் நிலைமைகளால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று பதில் அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்காக வழங்கப்பட்ட 15 இலட்சம் ரூபா நிதி உதவியை, 20 இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வடக்கு, கிழக்கில் போர் காரணமாக பெரும்பாலானவர்கள் தமது குடியிருப்புகளை இழந்தனர். அவ்வாறு குடியிருப்புகளை இழந்தவர்களுக்காக பல்வேறு வீடமைப்புத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி நிலைவரத்தின்படி, அந்த மாகாணங்களில் இன்னும் தமக்குரிய ஒரு வீட்டைக் கொண்டிருக்காத 13 ஆயிரத்து 69 இடம்பெயர்ந்த குடும்பங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

வீடற்ற இடம்பெயர்ந்த குடும்பங்களில் இரண்டு அல்லது அதற்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 340 சதுர அடி வீட்டை அமைப்பதற்காக 9 இலட்சம் ரூபாவும், இரண்டுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 550 சதுர அடி வீட்டை அமைப்பதற்காக 15 இலட்சம் ரூபாவும் நிதியுதவியாக வழங்க இதற்கு முன்னர் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் குறித்த வீடுகளை அமைக்கும் வகையில், தற்போது வழங்கப்படும் உதவித்தொகையை குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கருதாது, 550 சதுர அடி வீட்டுக்காக 2026ஆம் ஆண்டு முதல் 20 இலட்சம் ரூபா வரை அதிகரிப்பது பொருத்தமானது என அடையாளம் காணப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்படும் உதவித்தொகையை 20 இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்காக வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (எ-இ)

## கட்சியிலிருந்து விலகியவர்களை பழிவாங்கவே ஓய்வூதியம் இரத்து

### திலித் ஜயவீர குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.19



மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து பிரிந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை பழிவாங்கும் நோக்கத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய நீக்கத் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்துள்ளது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர குற்றஞ்சாட்டியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் 72பேர் இருக்கிறார்கள். அவர்களின் சம்பளம் கட்சி நிதியத்துக்கே வழங்கப்பட்டுவந்தது. தற்போது அவர்களில் அதிகமானவர்கள் தங்கள் மனச்சாட்சியின் பிரகாரம் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளனர். அவர்களுக்குத் தற்போது நாடாளுமன்ற ஓய்வூதியம் மாத்திரமே கிடைக்கிறது. அவர்களைப் பழிவாங்கும் நோக்கிலே தற்போது அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அரசாங்கத்துக்கு பழிவாங்கும் நோக்கமே தவிர, மக்களின் பணத்தை மீதப்படுத்துவதற்கு அல்ல-என்றார். (எ-இ)



அனுமதி இல்லாமல்

## நுண்நிதி நிறுவனங்கள் எவையும் வேலணையில் செயற்படத் தடை!

### தவிசாளர் அசோக்குமார் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், செப். 19

வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நுண்நிதி நிறுவனங்கள் எவையும் அனுமதி இல்லாமல் செயற்படுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என வேலணைப் பிரதேசசபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தெரிவித்தார்.

தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமாருக்கும், நுண்நிதி நிறுவனங்களின் முகாமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் செயற்படும் நுண்நிதி நிறுவனங்கள் அனைத்தும் கட்டாயம் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும். பதிவுகளை மேற்கொள்ளாத நுண்நிதி நிறுவனங்கள் இயங்குவதற்கு அனுமதிக்கப்படாது என்பதுடன், இந்த நடைமுறை எந்தவொரு விட்டுக்கொடுப்பும் இன்றி இறுக்கமாகப் பேணப்படும். இலங்கை மத்திய வங்கியின் வரையறுக்கப்பட்ட வட்டி வீதத்துக்கு அதிகமாக நுண்நிதி நிறுவனங்கள் வட்டியை அறவிடமுடியாது. அவ்வாறு அறவிடின், அதற்கேற்ற நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம். மாலை 5 மணிக்குப் பிறகும், பண்டிகைக் காலங்களிலும் பண அறவீடுகளை நுண்நிதி நிறுவனங்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். அத்துடன், பொதுமக்களின் கண்ணியத்தைப் பேணும் வகையில் உரையாடல்களை மேற்கொள்ளவேண்டும். இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதில் நுண்நிதி நிறுவனங்களுக்கு ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், அவை தொடர்பில் சபைக்குத் தெரிவிக்கமுடியும்-என்றார். (ம-26)

## சிறுவர் பராமரிப்புச் சாசனத்தில் இணைய இலங்கை விருப்பம்

கொழும்பு, பெப்.19

சிறுவர் பராமரிப்புச் சீர்திருத்தம் தொடர்பான உலகளாவிய சாசனத்தில் இணையும் முதலாவது தெற்காசிய நாடாக இலங்கை மாறவுள்ளது. சிறுவர் பராமரிப்புச் சீர்திருத்தம் தொடர்பான உலகளாவிய சாசனத்தில் இணைவதற்கான உத்தியோகபூர்வ விருப்பத்தை இலங்கை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகள் சபையிடம் வெளிப்படுத்தியுள்ளது. இந்தச் சாசனத்தை தற்போது 34 நாடுகள் அங்கீகரித்துள்ளன. தெற்காசிய பிராந்தியத்தில் இதுவரை எந்தவொரு நாடும் இந்தச்சாசனத்தில் இணையாத நிலையில், அதில் இணையும் முதல் தெற்காசிய நாடாக இலங்கை மாறவுள்ளது. இலங்கையின் தேசிய சிறுவர் பராமரிப்புக் கொள்கைகளை மேலும் வலுப்படுத்துவதும், அவற்றை சர்வதேச தரத்துக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துவதும் இந்தச் சாசனத்தில் இணைவதன் முதன்மை நோக்கம் என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றக்கொள்கை அவசியம்!



## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

**முல்லைத்தீவு, பெப்.19**

**அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக ஒரே இடத்தில் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கான முறையான இடமாற்றக்கொள்கை வகுக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 5, 7 அல்லது 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே சேவை நிலையத்தில் பணியாற்றிவருகின்றனர். குறிப்பாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் தவித்துவருகின்றனர். ஒரு ஊழியர் பத்தாண்டுகள் ஒரே இடத்தில் பணியாற்றுவதை நிர்வாக ஒழுங்கு எவ்வாறு அனுமதிக்கிறது? 1994 முதல் பல்வேறு பதவிகளின் கீழ் இணைக்கப்பட்டு, 2012ஆம் ஆண்டு வர்த்தமானி (1774/31) மூலம் 'அபிவிருத்தி உத்தியோகத்தர்' எனப் பெயர் மாற்றம் பெற்ற இந்த வகுதியினருக்கு, இன்றுவரை ஏன் முறையான இடமாற்றக்கொள்கை இல்லை? வடக்கு மாகாணத்துக்குள்ளேயே அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பரவலாக்கம் சமச்சீரற்றதாக உள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகையாக உள்ளனர். நிர்வாகச் செயற்பாடுகளுக்குத் தேவையான ஆளணிப் பற்றாக்குறையுடன் வன்னி மண் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகிறது. சமத்துவம் என்பது வன்னிப் பெருநிலப்பரப்பில் கேள்விக்குறியாகவே உள்ளது.

புதிய அரசாங்கமாவது இந்தச் சமச்சீரற்ற வள ஒதுக்கீடுகளைச் சீராக்கி, பாதிக்கப்பட்டுள்ள வன்னி மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் - என்றார். (ச-246)

# நிர்வாக உத்தியோகத்தர் சேவைக்கு புதிய இடமாற்றக் கொள்கை

## ஆளுநர் நடவடிக்கை


யாழ்ப்பாணம், பெப்.19

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களின் நீண்டகால கோரிக்கைகளை ஏற்று, அவர்களுக்கெனத் தனித்துவமான புதிய இடமாற்றக் கொள்கை ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்த வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற அகில இலங்கை நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கத்துடனான சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. தற்போது முகாமைத்துவ அலுவலர்கள் சேவைக்கான பொதுவான கொள்கையே பின்பற்றப்படுகிறது. இனிவரும் காலங்களில் அதிசிறப்புத் தர முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கென பிரத்தியேக இடமாற்றக்கொள்கையை உருவாக்குமாறு அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான கடமைப் பொறுப்புகளைத் தெளிவாக வரையறுக்கவும், சில திணைக்களங்களில் அவர்களுக்கான தனிப்பட்ட அலுவலக வசதிகளைச் செய்து தரவும் இணக்கம் காணப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களாகக் கடமையாற்றும் அதிசிறப்புத் தர உத்தியோகத்தர்கள் விடுமுறைக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

மேலும் செயலாளர்கள் உத்தியோகபூர்வ நாட்குறிப்பைப் பேணுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பிலும் சாதகமாகப் பரிசீலிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தினார். (ச-56,66)



# பங்களாதேஷ் பிரதமரைச் சந்தித்தார் நளிந்த

கொழும்பு, பெப்.19

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பங்களாதேஷின் புதிய பிரதமர் தாரிக் ரஹ்மானைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் சார்பாக அமைச்சர் நளிந்த ஜயசிங்க அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இரு தரப்பினரும் இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்றும், மருந்து மற்றும் சுற்றுலாத்துறைகளில் கவனம் செலுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# மக்களுக்கு வழங்கிய ஆணை ஓய்வூதிய நீக்கம் மட்டுமல்ல!

## நிஸாம் காரியப்பர் தெரிவிப்பு


கொழும்பு, பெப்.19

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்குவதன் மூலம் தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக அரசாங்கம் கூறுவது ஏமாற்று வேலை என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் ஒரே நோக்கத்துக்காகவே அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்கும் சட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. ஒரு உரிமையை வழங்கும் சட்டத்தை நினைத்த மாத்திரத்தில் நீக்கமுடியாது. அவ்வாறு செய்வது சட்டரீதியாகப் பிழையானது. ஓய்வூதியத்தை நீக்குவதாக இருந்தால், உறுப்பினர்களின் சம்பளத்தில் ஒரு பகுதியைச் சேர்த்து ஒரு நிதியத்தை உருவாக்கி, தேவையுள்ளவர்களுக்கு வழங்கும் முறையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அரசாங்கம் இந்தச் சட்டத்தின் மூலம் மக்கள் ஆணையை நிறைவேற்றிவிட்டதாகக் கூறுகிறது. ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது போன்ற முக்கியமான வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை-என்றார். (ச-இ)

# தொழில் வல்லுநர்களின் பாதுகாப்புக் கேள்விக்குறி

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப்.19

சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரமான சம்பவம், பொதுமக்கள் மற்றும் தொழில்வல்லுநர்களின் பாதுகாப்புத் தொடர்பாக மீண்டும் ஒரு பெரும் கேள்விக்குறியை எழுப்பியுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஒரு நாட்டுக்குள் குடிமக்களினதும் தொழில் வல்லுநர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எந்தவொரு அரசாங்கத்தினதும் முதன்மையான பொறுப்பாகும்.

எந்தவொரு தொழில்வல்லுநரும் அழுத்தங்கள் அல்லது அச்சுறுத்தல்கள் இன்றி, சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் தமது தொழில்முறைச் சேவைகளை வழங்குவதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு. குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சூழலில் தொழில்வல்லுநர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வலுவான மற்றும் நம்பகமான வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவேண்டும்-என்றுள்ளது. (எ-இ)

# 323 கொள்கலன் விடுவிப்பு விசாரணை தெரிவுக்குழுவில் உபாலி பன்னிலகே

கொழும்பு, பெப்.19

முறையான பரிசோதனையின்றி 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்வதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினராக அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே நியமிக்கப்பட்டுள்ளார்.

நிலையியற் கட்டளை 106இன் விதிகளுக்கு அமைவாக இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சபாநாயகர் நேற்று நாடாளுமன்றுக்கு அறிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்கள் கட்டாய பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், அது தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைக்கவும் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசேட குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அநுர கருணாதிலக விலகியதையடுத்து வெற்றிடம் ஏற்பட்டிருந்தது.

இந்த வெற்றிடத்துக்கு, கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போக்குவரத்து விதிமீறல்;

# வவுனியா சாலை சாரதிக்கு ஒழுக்காற்று நடவடிக்கை!

**வவுனியா, பெப்.19**
**பயணிகள் போக்குவரத்துச்சேவை விதிமுறைகளை மீறி, பேருந்தைச் செலுத்தும்போது கைத்தொலைபேசியைப் பயன்படுத்திய இலங்கை போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலைச் சாரதி ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

வவுனியா சாலையைச் சேர்ந்த சாரதி ஒருவர் பேருந்தை ஓட்டிச் செல்லும்போது கைத்தொலைபேசியைப் பயன்படுத்தியமை தொடர்பாகவடமாகாண வீதிபோக்குவரத்து அதிகாரசபைக்கு ஆதாரத்துடன் முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.
வடபிராந்திய முகாமையாளரின் பணிப்புரைக்கு அமைய, குறித்த சாரதிக்கு 3 நாள்கள் கட்டாய மீட்டல் பயிற்சி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.
இதுதொடர்பாக வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளதாவது-
தனியார் அல்லது அரச பேருந்துச் சாரதிகள் வாகனம் செலுத்தும் போது கைத்தொலைபேசி பேசுதல், அதிவேகமாகச் செலுத்துதல் அல்லது கவனவீனமாகச் செயற்படுதல் போன்ற விதிமீறல்களில் ஈடுபட்டால், பொதுமக்கள் 0719090900 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு ஆதாரங்களுடன் முறையிடலாம்.
அவ்வாறு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் மீது எவ்வித பாரபட்சமுமின்றித் துரித நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச-66,56)

## சிலுவைகள் எமக்கு சிறகுகளாகட்டும்

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (லூக் 9:23)

தவக்காலத்தின் தொடக்க நற்செய்தியாகிய இன்று இறைமகன் அவமானங்களால் நிறைந்திட்ட தமது மண்ணக வாழ்வின் முடிவை முதல்முறையாகத் தம் சீடருக்கு அறிவிக்கின்றார். தம்மைப் பின்பற்ற விழையும் அனைவருக்கும் முத்திரு கோட்பாடுகளை வகுக்கின்றார். முதலாவதாக இயேசுவைப் பின்பற்ற விரும்பும் யாவரும் தன்னலம் துறந்து நாளாந்த துன்ப துயர சிலுவையோடு இயேசுவின் வழி செல்வேண்டும். இரண்டாவதாக தம்மிடமுள்ள அனைத்தையும் இழந்து, துறந்து இயேசுவில் தம்மை வார்த்தெடுத்து பொதுப்பணியில் ஈடுபடுவது. அடுத்து மனச்சாட்சியை பாழ்படுத்தி உலகம், உடமைகள், பெருமைகள் போன்றவற்றை உயர்வாகக் கொள்ளாதிருத்தல். "ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?" (லூக் 9:25)

இவ்வுலகிற்கு வெற்றுக்கைகளோடு வந்த நாம் இறுதியிலும் வெறுமையாகவே மண்ணோடு மண்ணாகின்றோம். அனைத்தையும் பிடுங்கி எடுத்த பின்பே புதைக்கப்படுவோம். ஆடிய ஆட்டங்கள், போட்ட வேஷங்கள், குவித்த செல்வங்கள் எதுவும் கூடவராது. எம்மோடு கூடவருவது நாம் செய்த நன்மைகள், தியாகங்கள், பிறர்நலம் போன்ற புண்ணியங்களின் வெகுமதியாகும். எனவே "மனம் மாறுங்கள் விண்ணரசு நெருங்கிவந்துவிட்டது". வாழும் போதே ஆன்மாவைக் காத்துக்கொள்ள முயற்சி எடுப்போம்.

● எஸ் யேசுதாஸ்
கொழும்புத்துறை

## இலவச யோகக்கலை சான்றிதழ் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.19
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இளைஞர்களுக்கான இலவச யோகக்கலை சான்றிதழ் பயிற்சிநெறியின் (அடிப்படை) பிரிவு 1 வகுப்புகள் எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 3 மாதங்கள் வரை வார இறுதிநாள்கள் மற்றும் அரச விடுமுறை நாள்களில், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. இளைஞர் விவகார அலகில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பூர்த்திசெய்து சமர்ப்பித்து, இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ளலாம். பதிவை மேற்கொள்ளாதவர்கள் பயிற்சியின் ஆரம்ப தினத்தில், பயிற்சி நடைபெறும் இடத்துக்கு காலை 6 மணிக்கு வருகை தந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து, வளவாளரிடம் பதிவை மேற்கொண்டு, பயிற்சியில் இணைந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்குக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.19
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக மகாபாரதத் தொடர் சொற்பொழிவு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.
ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சைவப்புலவர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு 'மகாபாரதம்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-66)

## நாச்சியம்மையார் குருபூசை தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், பெப்.19
யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில், புண்ணிய நாச்சியம்மையார் தினமும், சைவநெறித் தேர்வுப் பரிசளிப்பு விழாவும் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
சைவபரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் விஜயசிங்கம் தயாபரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அருளானந்தம் சிவனருள்ராஜாவும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சைவநெறி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி யோகினி சுகர்ஸன் ஆகியோரும் கலந்துகொள்வர்.
நிகழ்வில் புண்ணிய நாச்சியம்மையார் குருபூசை, பரத நாட்டிய நிகழ்வு, பரிசில் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண்செலவுகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். தந்தைவழி உறவினர்களால் வீண்செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் தேவைப்படுகிறது.

**கன்னி:** உற்சாகத்துடன் செயற்படும் நாள். இளைய சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கும்பம்:** சிலருக்குத் தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவருடன் அனுசரணையாக நடந்து கொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச்செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக்கொடை

யாழ்., பெப்.19 யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடை முகாமில் கலந்துகொண்டு பங்களிப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)



# மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 03 . 1982

இறப்பு 18 . 02 . 2026

## பத்மநாதன் ஸ்ரீரங்கன்

வேலணை கிழக்கு, 2 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பத்மநாதன் ஸ்ரீரங்கன் அவர்கள் நேற்று (18.02.2026) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் - லக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சந்திரவதனியின் (ஆசிரியை - யா/வேலணை கிழக்கு, மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், வர்ஷன், பவிஷன் (யா/வேலணை மத்திய கல்லூரி - மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தம்பிராஜா - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், லக்ஸ்மணன், றேகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், றஜிதா, ரவீந்திரன், சகுந்தலாதேவி, தர்மராசேந்திரன், விஜயேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாருஜன், அகிசன் ஆகியோரின் பெரியப்பாவும், காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளை, சபாபதி இராசலெட்சுமி ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.02.2026) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை
077 926 2447

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 60781 ) N-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 07 . 1959

மறைவு 14 . 02 . 2026

## பூபாலபிள்ளை பேரின்பநாயகம்

காரைநகர் சக்கலாவோடையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலபிள்ளை பேரின்பநாயகம் அவர்கள் 14.02.2026 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலபிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாசினியின் அன்புக் கணவரும், மிதுலன், அபிரன், பௌர்ண ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூபாலபிள்ளை, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், நேசரத்தினம், சோலைமலர், உருக்குமணி தேவி, சிவபுண்ணியம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற மகாலட்சுமி, சண்முகராசா, சுப்பிரமணியம், காலஞ்சென்ற பாலசுந்தரம், புஸ்பவதி, பத்மாசினி, கமலானந்தன், பிரேமாசினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2026) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு புதுறோட்டு காரைநகரில் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுறோட்டு காரைநகர்.
077 926 6292 (அண்ணா)

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.60788) N-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 01.03.2025 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரும் பாசமிகு தந்தையுமாகிய

## அமரர்
## காசிலிங்கம் பாலச்சந்திரன்



அவர்களின் ஓராண்டு கிரியைகள் இன்று (19.02.2026) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெற்று அதனைத் தொடர்ந்து நாளை மறுதினம் (21.02.2026) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் இத்தியடி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் பூஜையுடன் மதியபோசன நிகழ்வும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.)

தோற்றம் 19.12.1943

மறைவு 01.03.2025

சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(CS/60787) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி, கனகாம்பிகை குளங்களைப் பாதுகாக்கத்திட்டம்

கிளிநொச்சி, பெப்.19

கிளிநொச்சிக்குளம் மற்றும் கனகாம்பிகைக் குளத்தின் கீழான நீர் வழிந்தோடும் பகுதிகளில் நிலவும் சட்டவிரோத ஆக்கிரமிப்புகளைத் தடுத்து புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கான விசேட களப்பயணம் ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் தொடர்ச்சியாகவே இந்த களப்பயணம் இடம்பெற்றது. அந்தக் கலந்துரையாடலில் குள ஒதுக்கப் பகுதிகள், சட்டவிரோத ஆக்கிரமிப்புகள், நில எல்லை நிர்ணயம் மற்றும் எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குளப்பகுதி மற்றும் குளத்தின் கீழான நீர் வழிந்தோடும் பகுதிகளில் சட்டவிரோத மாக மேற்கொள்ளப்படும் கட்ட நிர்மாணங்கள் மற்றும் நிலப் பயன்பாடுகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டதுடன், அவற்றைக் கட்டுப்படுத்தத் துறைகள் இடையேயான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட இந்தக் கள ஆய்வின்போது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் நேரில் பார்வையிடப்பட்டு, நில எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்டதுடன், தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. (ச-113)



# விளையாட்டுப்போட்டிக்கு மகளிர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.19

சாவகச்சேரி மண்டுவில் கிராம அலுவலர் பிரிவில் மகளிர் தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டி நடத்தப்படவுள்ளது. போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் 077 0417860 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# பொலிஸ் பரிசோதனை

யாழ்ப்பாணம், பெப்.19

சாவகச்சேரி பொலிஸ் நிலைய அரையாண்டு பொலிஸ் பரிசோதனை நிகழ்வு வடமாகாண சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பி.எஸ். ஜெயமஹ தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது சாவகச்சேரி பொலிஸ் நிலைய அதிகாரத்துக்குட்பட்ட வாகனங்கள், ஆவணங்கள், வழக்குப் பதிவேடுகள் மற்றும் பொலிஸ் நிலைய வளாக அழகுபடுத்தல் பராமரிப்பு என்பவை பார்வையிடப்பட்டன. (ச-28)

## 29ஆம் ஆண்டு நினைவு



மன்னார் அலைப்பாடு கடலில் சங்கமமான

| | |
|---|---|
| திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி) | தோற்றம் :- 23.06.1974 |
| திருச்செல்வம் கம்சினி | தோற்றம் :- 05.06.1996 |
| சிவலிங்கம் திருச்செல்வம் | தோற்றம் :- 08.02.1972 |

மறைவு:-19.02.1997

பிறப்பவும் எல்லாம் இறப்பவும்
கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் என்நாளும் உயிர் வாழும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
அக்கா, அக்காள்,
மைத்துனர்மார், மைத்துனிமார், பிள்ளைகள்.

சி.திருப்பதி,
லண்டன் (cs.60772) N1

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 03 . 1957



மறைவு 18 . 02 . 2026

### இளையதம்பி பரமஞானம்

இல.02, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பரமஞானம் அவர்கள் நேற்று (18.02.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆனந்த நடராசா, நல்லைநாதன், வைகுந்தவாசன், மகேஸ்வரி மற்றும் Dr.ரகுநாதன், கதிர்காமத்தம்பி, பத்மாவதி, நவமணி, புனிதவதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.கதிர்காமத்தம்பி (சகோதரன்)

(CS 60729) A

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**டெண்டருக்கான அழைப்பு (கேள்வி கோரல்)**

ஹாலோ ட்ரஸ்ட் - இலங்கை திட்டம் பின்வரும் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு தகுதியான ஏலதாரர்களிடமிருந்து சீல் வைக்கப்பட்ட ஏலங்களுக்கு அழைப்புவிடுக்கின்றது.

**வாகன விவரங்கள்**

| Type | Make | Model | Mileage (KM) | Year of manufacture | Condition |
|---|---|---|---|---|---|
| Truck | TATA | LPT1109 | 220663 | 2009 | Not in use |
| Truck | TATA | LPT1109 | 188593 | 2009 | Not in use |
| Canter | Mitsubishi | FE635E6R | 320632 | 2009 | Not in use |
| Canter | Mitsubishi | FE635E6R | 260000 | 2009 | Not in use |
| Pickup | Mitsubishi | Single cab | 363406 | 2008 | Not in use |
| Van | MICRO | MPV JUNIOR 111 | 210000 | 2014 | Not in use |
| Motorbike | TVS | Flame 125 | N/A | 2010 | Not in use |
| Motorbike | TVS | Flame 125 | N/A | 2010 | Not in use |
| Motorbike | Bajaj | Pulser 150CC | N/A | 2004 | Not in use |
| Trailer | N/A | N/A | N/A | N/A | Not in use |
| Trailer | Dutch lanka | DLLB60T | N/A | 2009 | Not in use |
| Generator | KAMA | 5KVA | N/A | N/A | Not in use |
| Generator | KAMA | 5KVA | N/A | N/A | Not in use |
| Generator | Yama | KDE5000T (5KVA) | N/A | N/A | Not in use |
| Generator | Yanmar | YDG2700 | N/A | N/A | Not in use |
| Generator | N/A | N/A | N/A | N/A | Not in use |

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ரூபாய் **2500 திரும்பப் பெற முடியாத டெண்டர் கட்டணத்தை** செலுத்தி ஏல ஆவணங்களைப் பெறலாம்.

ஏல ஆவணங்களை இல 450. திருநகர் மேற்கு. கிளிநொச்சி. எனும் முகவரியிலுள்ள ஹாலோ ட்ரஸ்ட் இலங்கை **திட்ட அலுவலகத்தில் பெறலாம்..**

அலுவலக நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

அல்லது ஏலதாரர்கள் ஏல ஆவணங்களை பின்வரும் மின்னஞ்சல் மூலம் கோரலாம்.

thanesh.krishnapillai@halosrilanka.org

(திருப்பிப் பெற முடியாத டெண்டர் கட்டணத்தை செலுத்தியதற்கான சான்று ஆவணங்களை வெளியிடுவதற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

முன்கூட்டியே ஒரு சந்திப்பை மேற்கொள்வதன் மூலம் வாகனத்தின் தள ஆய்வை நீங்கள் ஒழுங்கு செய்யலாம்

பூர்த்தி செய்யப்பட்ட ஏலங்கள் "வாகன டெண்டர் திறக்கப்படலாகாது" என்று தெளிவாகக் குறிக்கப்பட்ட சீல் செய்யப்பட்ட உறையில் மேலே உள்ள முகவரிக்கு 02.03.2026 திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு ஏலத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ [illegible] ஹாலோ ட்ரஸ்டிற்கு உரிமை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அஞ்சலோட்டப் போட்டியில் சென்.ஜோன்ஸ் முதலிடம்

யாழ்ப்பாணம், பெப்.19

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லத் திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட அஞ்சலோட்டப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆண்கள் பிரிவு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாமிடத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், மூன்றாமிடத்தை யாழ்ப்பாணக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (ச)



## வங்கக்கடலில்...

பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று மாலை வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கையின் தென்கிழக்கே தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வுநிலை உருவாகியுள்ளது. இதனால், கடலில் தங்கிருந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது ஆபத்தான நிலைமைகளை ஏற்படுத்தும். எனவே, மீனவர்கள் அது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் கடற்படையினரும் இது தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம். குறித்த பகுதியில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம)

## பயங்கரவாதத்...

வாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதேநேரம், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு தேவையற்றது என்று தவிசாளர் மயூரன் பிரேரணையைக் கொண்டு வந்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பில் அவர் உரையாற்றுகையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுலாக்கம் செய்தல் அல்லது நீக்குதல் என்பன உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டது என்பதனையும், அது நாடாளுமன்றத்துடன் தொடர்புடையது எனவும் நாம் நன்கு அறிவோம். ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக இல்லாதொழிப்போம் என்ற வாக்குறுதியினை மக்களுக்கு வழங்கி அதன் மூலம் தமிழ்மக்களினதும், சிங்கள மக்களினதும் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் என்ற பெயரில் தற்போது நடைமுறையில் காணப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை விட மிக மோசமான வரைவை முன்வைத்துள்ளது. குறித்த சட்டவரைவு சர்வதேச நியதிகளுக்கு முரணாக உள்ளது என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே, இந்தச் சட்டவரைவை நிறைவேற்றக் கூடாது என நல்லூர் பிரதேசசபையில் தீர்மானம் எடுக்க வேண்டும் - என்றார்.

இந்தப் பிரேரணைக்கு தேசிய மக்கள் சக்தியினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய போதிலும், பெரும்பான்மை ஆதரவுக்கு அமைய பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (அ-ம-26-66)

## பயங்கரவாதத் தடைச்சட்டம்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன இணைந்து இன்று தொடக்கம் எதிர்வரும் நான்கு தினங்களுக்கு இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு மாற்றாகக் கொண்டுவரப்படும் 'பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு' அவசியம் இல்லை என்று வலியுறுத்தியும் நீதி அமைச்சுக்கு மனுவொன்றை அனுப்புவதற்கு யாழ்ப்பாணப் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த மனுவுக்காகவே இந்தக் கையொப்பங்கள் சேகரிக்கப்படவுள்ளன. (அ-ம-26-66)

## காணி...

பெரும் சர்ச்சைக்கு உரியதாக மாறியிருக்கும் திஸ்ஸ விகாரை விடயத்தில் தீர்வொன்றைக் காண்பதற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. இதற்காக பௌத்தசாசன அமைச்சின் அதிகாரிகள், அரச அதிகாரிகள், திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஆகிய தரப்புகளுக்கு இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே, காணிகளை விடுவிப்பதற்கு திஸ்ஸ விகாராதிபதி திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ விகாரை விடயத்தில் மக்களின் காணிகளை மக்களிடமே வழங்க வேண்டும் என்று நயினாதீவு மற்றும் ஆரியகுளம் விகாராதிபதிகள் வலியுறுத்திவரும் நிலையில், அவர்களும் பாதிக்கப்பட்ட மக்களும் அழைக்கப்படாமலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

காணிகளுக்கு உரிய ஆவணங்கள் பொதுமக்களால் முறைப்படி வழங்கப்பட்ட போதிலும், திஸ்ஸ விகாராதிபதியால் இதுவரை முறையான ஆவணங்கள் எவையும் வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பில் எந்தத் தீர்மானமும் இல்லாமலேயே கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளது. அடுத்தகட்டக் கலந்துரையாடல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

## ஐஸ்...

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடிய ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினர் விசாரணை செய்தபோது, அவருடைய உடமையில் இருந்து ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணையில் அந்த நபரிடம் இருந்து ஐஸ் போதையைக் கொள்வனவு செய்த மேலும் நான்குபேர் கைது செய்யப்பட்டனர். அவர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## பியர்...

றார். அந்த வர்த்தக நிலையத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த அவருடைய கணவன், அவர் மீது கொடூர தாக்குதலை நடத்தியதுடன், பியர் போத்தலை உடைத்து தலை, வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் சரமாரியாக குத்தி காயத்தை ஏற்படுத்தியுள்ளார்.

படுகாயங்களுக்கு உள்ளான குறித்த பெண் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், படுகாயத்தை ஏற்படுத்திய கணவர் தப்பியோடி தலைமறைவாகியுள்ளார். சந்தேகநபரை மருதங்கேணி பொலிஸார் தற்போது தேடி வருகின்றனர். (அ-ம-100)

## உழவியந்திரத்துடன்...

அதே திசையால் பயணித்த மோட்டார் சைக்கிள் முந்திச்செல்ல முற்பட்ட போது, எதிரே வந்த உழவியந்திரத்துடன் மோதுண்டு இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த நபரே உயிரிழந்துள்ளார். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டதுடன், கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-159)

## பாரபட்சமாக...

நடத்தி வருகின்றோம். இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் நேற்றுப் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது. ஆனால், எமக்கு அழைப்பு விடுக்காமல் இந்தப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துள்ளனர்.

எம்மிடம் இருந்து ஆவணங்களைப் பெற்றுள்ளனர். அந்தக் காணிகள் எம்முடையவை என்பதற்கு நாங்கள் அனைத்து ஆவணங்களையும் வழங்கியுள்ளோம். ஆனால், எமது கருத்துக்களைத் தெரிவிக்க இடம் வழங்கப்படாமல் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எம்மை அழைக்காமல், எமது காணிகளை ஆக்கிரமித்த விகாராதிபதியை அழைத்துக் கலந்துரையாடல் நடத்துவது, அந்த ஆக்கிரமிப்புக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாகவே நாங்கள் பார்க்கின்றோம் - என்றனர். (அ-ம-26)

## 5 கிராம்...

சாட்டில், சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகமும் அரங்கியலும்; முழுநாள் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், பெப்.19

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் 'கலைத்தூது கலையக' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சிப்பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர், விவரங்களை யாழ்.திருமறைக்கலா மன்ற அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளமுடியும் என்றும், மேலதிக விவரங்களுக்கு 021 222 2393, 0776692657, 077 6393620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வேலையாட் தேவை

யாழ் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உணவகத்திற்கு (AS Hotel) கணக்காளர் வெற்றிடம் உள்ளதால் பெண் ஊழியர் தேவை.

தொடர்பு: 077 146 5015
077 977 7656

(cs.60785) N-1

## சைவ உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை

* சமையல் உதவியாளர்
* றொட்டி மாஸ்ரர்
* தோசை மாஸ்ரர்
* உணவு பரிமாறுபவர்கள்
* சுத்திகரிப்பாளர்

தங்குமிட வசதி உண்டு.

தொடர்புகளுக்கு:
076 42 36 862

(CS 31308) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 26 . 05 . 1946

இறப்பு 18 . 02 . 2026

### வயிரமுத்து இராஜேஸ்வரி

அன்னார் நேற்று (18.02.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - தெய்வானை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் - செல்லம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் வயிரமுத்து அவர்களின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, சந்திரகாந்தி, குணரத்தினம், இராசலட்சுமி, சிவநடேசன், திலகவதி ஆகியோரின் சகோதரியும், வரதராசன், தர்மராஜன், காலஞ்சென்ற சிவகுமாரன், ஜெயராசன், ஜெயச்சந்திரா, ஜெயலலிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பவதி, மகேஸ்வரி, நளாயினி, சந்திரகாந்தன், இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், சங்கீர்த்தனா, திலக்சனா, ரிசிசங்கர், மதுமிதா, கோபிகா, மதுமிதன், அச்சுதன், அபிநயன், அட்சயா, அபிராமி, கோபிராம், ஹரிராம், றெகானா, லக்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2026) வியாழக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு புத்தூர் கிழக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T.P:077 95 70 438 குடும்பத்தினர்.

(CS 31307) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 03 . 1951

இறப்பு 17 . 02 . 2026

### இரத்தினம் அழகேஸ்வரி (கிரிசா)

சங்கோலை மாவிட்டபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும், கே.கே.எஸ். வீதி, இணுவில் மேற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் அழகேஸ்வரி 17.02.2026 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான துரைராசா - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், இன்பலதா (உதவி அதிபர், யா/ நடேஸ்வரக் கல்லூரி), இன்பரூபி, இன்பமோகன் (Tharkavi Familymart உரிமையாளர், கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரதீபன் (கனடா), திருவரன், சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகாசினி (வைத்தியர், Lady Ridgeway hospital for Children, Borella, Colombo), திகழினி, அஸ்வினி, தர்விகா, கவிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திருநாவுக்கரசு, சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற சோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் பாலையா, சரஸ்வதி (கனடா), இராஜேஸ்வரி (கனடா), தியாகராசா (சுவிஸ்), கமலாம்பிகை, கணேசலிங்கம் (கனடா), சந்திரன் (ஜேர்மன்), காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் அன்னலட்சுமி, அற்புதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.02.2026 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 7911 432
077 5384 359

K.K.S. வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(cs.60782) (N-1)

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 . 01 . 1946

இறப்பு 17 . 02 . 2026

### சின்னத்துரை ஆனந்தசெல்வம் (இளைப்பாறிய பொறியியலாளர்)

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஆனந்தசெல்வம் (இளைப்பாறிய பொறியியலாளர்) கடந்த 17.02.2026 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - பூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெபரஞ்சினியின் பாசமிகு கணவரும், ஜெபானந்தி (வைத்திய நிபுணர் - யாழ். மருத்துவபீடம்), ஜெபானந்தன் (பொறியியலாளர் - UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன் (Computer Engineer, Australia), மிதிலா (UK) ஆகியோரின் மாமனாரும், ஜொயனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜெஷான் (UK) ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்வானந்தேஸ்வரி (கனடா), சர்வானந்தேஸ்வரி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும், இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org